**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.05.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## "உலக தேனீ தின விழா 2026"

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் பூச்சியியல் துறையின் சார்பாக புகழ்பெற்ற தேனீ வளர்ப்பாளர் ஆன்டன் ஜான்சா அவர்களின் நினைவாக "உலக தேனீ தின விழா" மே மாதம் 20–ம் நாள், பூச்சியியல் துறையில் நடைபெற்றது. உலக தேனீ தினம் 2026–ம் ஆண்டின் கருப்பொருள் "நம் அனைவரையும் தாங்கி நிற்கும் தேனீ கூட்டம் போல– மக்களுக்காகவும் புவிக்காகவும் தேனீக்களாய் ஒன்றிணைவோம்" என்பதாகும். இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல் துணை வேந்தர், முனைவர். கா. சுப்பிரமணியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ்விழாவில் நான்காமாண்டு வேளாண் இளமறிவியல் மாணவர்கள் மேற்கொண்டு வரும் வணிகரீதியில் தேனீ வளர்ப்பு என்ற பாடத்தின் கீழ் மதிப்புக்கூட்டப்பட்ட தேனீப் பொருட்களான மணமூட்டப்பட்ட தேன், உதட்டு களிம்பு , தேன் சோப்பு, பாத வெடிப்பு களிம்பு, குமிழ் மெழுகுவர்த்தி, கிண்ண மெழுகுவர்த்தி, மலர் வடிவ மெழுகுவர்த்தி போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது. இதனை பல்கலைக்கழக செயல் துணை வேந்தர் அவர்கள் திறந்து வைத்து விற்பனைக்கு வைக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு தேனீக்களின் மேல் உள்ள அச்சம் விலக வேளாண் இறுதி ஆண்டு மாணவி, செல்வி. சி. பாக்கியலட்சுமி அவர்கள் முகம் முழுவதும் தேனீக்களை பரவச் செய்து 'தேனீத் தாடி' அமைத்து பார்வையாளர்களை வியக்கச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து உலக தேனீ தின விழாவானது துவக்கப்பட்டது. விழாவில் முனைவர் மா. முருகன், பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை அவர்கள் வரவேற்புரை வழங்கினார். அடுத்ததாக, முனைவர். வெ. பாலசுப்பிரமணி, தேர்வுக்கட்டுப்பாட்டாளர், முனைவர். சி. பாபு, முதன்மையர், முதுகலை பட்டப்படிப்பு மற்றும் முனைவர். என். வெங்கடேச பழனிசாமி, முதன்மையர், இளங்கலை பட்டப்படிப்பு ஆகியோர் தேனீக்களின் சிறப்பு குறித்து வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் சிறப்புரை ஆற்றிய பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர், முனைவர். மூ. சாந்தி அவர்கள், தேனீக்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

தமிழ் நாட்டின் முன்னோடி தேனீ வளர்ப்பாளர்களான திரு. ஆனந்த் மற்றும் திரு. சந்தோஷ் அவர்கள் தேனீ வளர்ப்பின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பின்னர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல் துணை வேந்தர், முனைவர். கா. சுப்பிரமணியன் அவர்கள் உலக தேனீ தின விழாவின் வரலாறு, தேனீக்களுக்கும் மலர்களுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் தேனீக்களின் முக்கியதுவம் குறித்து தலைமையுரை ஆற்றினார். இறுதியாக, முனைவர் வா. இரா. சாமிநாதன், பேராசிரியர், வேளாண் பூச்சியியல் துறை அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தேனீக்களின் வகைகள், தேனீ குடும்பத்திலுள்ள இராணி தேனீ, ஆண் தேனீ, வேலைக்கார தேனீ மற்றும் தேனீக்களை கையாளும் முறை குறித்தும் செயல் விளக்கம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளிக்குழந்தைகள், விவசாயிகள், வேளாண் இளமறிவியல் மாணவர்கள் மற்றும் பலதரப்பட்ட தேனீ வளர்ப்பாளர்கள் என சுமார் 150 பேர் கலந்துகொண்டனர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*